Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 179

புதன்கிழமை 24 மே 2023

வைகாசி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## ஓமந்தையில் சூடு!

### ஒருவருக்குக் காயம்

வவுனியா, மே 24

வவுனியா, ஓமந்தை புதிய வேலர்சின் னக்குளம் »11

விகாரைக்கு எதிரான

# தையிட்டிப் போராட்டத்தில் பொலிஸார் வெறியாட்டம்!

## அகிம்சைரீதியில் போராடியோர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை

## நீதிகேட்டோரில் 9 பேர் கைதாகினர்



யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம், தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக, நீதிமன்ற உத்தரவுக்கமைய, அமைதியான வழியில் – தனியார் காணிக்குள் நின்று நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனமான வெறியாட்டத்தை மேற்கொண்டனர். இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தனியாளாக துணிச்சலுடன் நின்று இரவிரவாகப் போராட்டத்தை தொடர்ந்தார். »11

## 55 கிராம் ஹெரோய்னுடன் சிறுமியொருவர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான 55 கிராம் ஹெரோய்னுடன் 16 வயதுச் சிறுமி »11

## யாழ்ப்பாணப் பல்கலைக்கு பிரிட்டன் தூதுவர் பயணம்

யாழ்ப்பாணம், மே 24

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹல்ஸ்ரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சம்பிரதாயபூர்வ பயணமொன்றை நேற்று மேற்கொண்டார். »11

## ஜூன் மாதம் 21ஆம் திகதியை கனடாப் படுகொலை நாள் ஆக்குக

### விமல் வீரவன்ஸ கோமாளித்தனக் கருத்து

கொழும்பு, மே 24

மே மாதம் 18ஆம் திகதியை 'முள்ளிவாய்க்கால் படுகொலைதினம்' என்றவாறாக கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அண்மையில் தெரிவித்திருந்த நிலையில், இதற்குப் பதிலடியாக ஜூன் »11

திருமண நிகழ்வுக்குச் சென்றபோது விபரீதம்

## மன்னாரில் நேற்றுக் கோரவிபத்து ஒருவர் உயிரிழப்பு: ஐவர் காயம்

விரிவு:- பக் - 11இல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பணமில்லை ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணம் உண்டு

## நல்லதொரு நகைச்சுவை என்கிறார் ஹர்சன ராஜகருணா



**கொழும்பு, மே 24**

**ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் உண்டு. உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொரு நகைச்சுவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் உண்டு. உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொரு நகைச்சுவை. இதைச் சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானிக்கும்.
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவைக் கொண்டுவர வேண்டாம் என்று உலக நாடுகள் கூறுகின்றன. அது அந்தளவு ஆபத்தானது. ஜனநாயகத்துக்கு விரோதமானது.
ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகுவதற்கு முன்பிருந்தே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு இந்த அரசிடம் கூறி வந்தோம். அப்போது சென்றிருந்தால் நிபந்தனை கடுமையாக இருந்திருக்காது.
நாடு வங்குரோத்து நிலையை அடைந்த பின் செல்வதால்தான் நிபந்தனை கடுமையாக உள்ளது. அதை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. நாம் ரணில் செய்கின்ற எல்லாவற்றையும் எதிர்க்கும் எதிர்க்கட்சி கிடையாது - என்றார்.
(ஒ-22)



3 கிலோ தங்கத்துடன்

## நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைது!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 3 கிலோ கிராம் தங்கம் மற்றும் 90க்கும் மேற்பட்ட அலைபேசிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மேற்படி பொருள்களை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்ததுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.
தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திரக் கட்சி என்பன வலியுறுத்தியுள்ளன. (ம)

## வெளிநாடு அனுப்புவதாக ஆசைகாட்டி பணமோசடி சந்தேகநபருக்கு மறியல்!

வவுனியா, மே 24
வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பலரிடம் பணமோசடியில் ஈடுபட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.
வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்புவதாக கூறி நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் பல லட்சம் ரூபா பணத்தை பலரிடமிருந்து பெற்றுள்ளார்.
நீண்டநாள்கள் கடந்தும் வெளிநாட்டுக்கு அனுப்பாமல் குறித்த நபர் காலத்தை இழுத்தடித்து வந்ததையடுத்து பணத்தை மீளத் தருமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர்.
ஆயினும் குறித்த நபர் பணத்தை மீளளிக்கவில்லை. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.
முறைப்பாட்டுக்கமைய விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-110)

## களவாடப்பட்ட நகைகள் உருக்கிய நிலையில் மீட்பு

### பெண்ணொருவர் கைது



அச்சுவேலியில் இடம்பெற்ற நகைத் திருட்டு தொடர்பில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். களவாடப்பட்ட நகைகள் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன என காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 18ஆம் திகதி அச்சுவேலியில் பட்டப்பகலில் நகைகள் திருட்டுப் போயுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டுக்கமைய காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். திருடப்பட்ட நகைகள் உருக்கப்பட்ட நிலையில் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.
சந்தேகநபரான பெண் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டதையடுத்து சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)

முரசுமோட்டையில்

## அனுமதிக்கு முரணாக மணலகழ்ந்தோர் கைது

கிளிநொச்சி, மே 24
கண்டாவளை சுண்டிக்குளம் தேசிய பறவைகள் பூங்கா முரசுமோட்டையில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக மணலேற்றிய மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகிறது என கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையில் இந்த மணலகழ்வு முறியடிக்கப்பட்டது.
இதன்போது மணலகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு உழவியந்திரங்கள் கையகப்படுத்தப்பட்டதுடன் மணலகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ச-113)

## ஏப்ரலில் பணவீக்கம் 33.6 வீதமாகச் சரிவு!

கொழும்பு, மே 24
தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின்படி, மொத்தப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 33.6% ஆகக் குறைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த மார்ச் மாதத்தில் பணவீக்கம் 49.2 % ஆக இருந்தது. ஏப்ரல் மாதத்தில் 15.6 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.
இதேவேளை, மார்ச் மாதத்தில் 42.3 % ஆக இருந்த உணவுப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 27.1% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், மார்ச் மாதத்தில் 54.9% ஆக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 39% ஆக குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# பொலிஸார் அலட்சியப்போக்கு நீதிமன்றால் எதிரி விடுதலை!

## பொலிஸ் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர் முறையீடு

யாழ்ப்பாணம், மே 24
நீதிமன்ற வழக்கு நடவடிக்கையின்போது உரிய முறைமைகளை பின்பற்ற அச்சுவேலி பொலிஸார் தவறியுள்ளனர். அதனால் எதிரியை நீதிமன்று விடுதலை செய்துள்ளது. இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார்.
அச்சுவேலி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும் நீதிமன்ற நடவடிக்கை பொலிஸ் அலுவலர் ஆகியோருக்கு எதிராக இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
முறைப்பாட்டுக்கமைய காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட அத்தியட்சகரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
முறைப்பாட்டில் பாதிக்கப்பட்டவரால் கூறப்பட்டுள்ளதாவது:
கடந்த ஆண்டு இரு தரப்பினரிடையே இடம்பெற்ற கைகலப்பு சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், பொலிஸார் மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர்.
அதன் காரணமாக கடந்த வழக்குத் தவணையின்போது போதிய சாட்சிகள் எதுவுமின்றி எதிரி விடுவிக்கப்பட்டுள்ளார்.
நீதிமன்ற வழக்கு நடவடிக்கையை தவறான முறையில் கையாண்டதன் காரணமாகவே எதிரி விடுவிக்கப்பட்டுள்ளார் என பாதிக்கப்பட்டவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றங்களால் சுற்றிவளைக்கிறதா அரசாங்கம்?

## மகாவலி 'ஜே' வலயம் தொடர்பில் கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**யாழ்ப்பாணம், மே 24**

**மகாவலி ஆற்று நீரை வடக்குக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை கூறிய பின்னரும், அதனை மையப்படுத்தி புதுப்புது வலயங்கள் இங்கே ஏன் உருவாக்கப்படுகின்றன? திருகோணமலையை சிங்களக் குடியேற்றங்களால் சுற்றிவளைத்ததைப்போன்று வடக்கையும் மாற்ற முயற்சிக்கப்படுகின்றது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முல்லைத்தீவு மணலாற்றை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள மக்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து வெலிஓயா என்று பெயரையும் சூட்டியுள்ளீர்கள். மகாவலி 'எல்' வலயம் என்று சொல்லப்படும் இந்தப் பிரதேசத்துக்கு இது வரையில் மகாவலி நீர் எட்டிப் பார்த்ததும் கிடையாது.

நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி 'ஜே' என்னும் புதியதோர் வலயத்தை உருவாக்குகிறீர்கள். இதுவும் 'எல்' வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி நீர் வரப் போவது கிடையாது.

இந்தப் புதிய வலயம் தொடங்குவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை சீனாவின் பினாமியான தாய்லாந்து நிறுவனத்துக்கு, கரும்பு பயிரிடுவதற்கு கொடுக்கப்படவுள்ளது.

மணலாறுக்கு நேர்ந்ததுதான் நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம் போன்றவற்றுக்கும் ஏற்படும் என்பதை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் கொள்ளவேண்டும். திருகோணமலையைச் சுற்றிவளைத்து சிங்களக் குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்ற சிங்களத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதே போல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்களக் குடியேற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது - என்றுள்ளது. (ஒ-5)

*பிணையில் வந்த பெண்*

## ஹெரோய்னுடன் மீண்டும் கைது

யாழ்ப்பாணம், மே 24

உரும்பிராயில் 50 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் 28 வயதுடைய பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 4 மாதங்கள் சிறையிலிருந்து விடுதலையாகியுள்ளதோடு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மீண்டும் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-26)

## தேனீ வளர்ப்புமுறை சுயதொழில் பயிற்சி

தேனீ வளர்ப்பை சுயதொழிலாக முன்னெடுக்கவுள்ள பயனாளிகளுக்கு பயிற்சி மற்றும் நிதிப்பங்களிப்பை யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு மேற்கொள்ளவுள்ளது. தேனீ வளர்ப்பை சுயதொழிலாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் முகமாக குறித்த பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தேனீ வளர்ப்பு உபகரணங்களான தேனீப்பெட்டி, தேனீ தொப்பி, புகையூட்டி மற்றும் தேன் பிரித்தெடுக்கும் உபகரணம் உள்ளிட்டவையும் கையளிக்கப்படவுள்ளன. அத்துடன் தொழில் முயற்சியாண்மைக்காக சுமார் 30ஆயிரம் ரூபா வீதம் தனிநபரொருவருக்கு செலவிடப்படுவதுடன் நிதிப்பங்களிப்பும் செய்யப்படும் என யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-125)

# இளம்குடும்பத் தலைவர் கோரமாக வெட்டிக்கொலை

## தென்னிலங்கையில் தொடரும் பயங்கரம்

கொழும்பு, மே 24

இளம் குடும்பத் தலைவர் 4 பேர் கொண்ட கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொடூரச் சம்பவம் நீர்கொழும்பில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 29 வயதுடைய அன்ரனி றொபேட் என்ற இளம் குடும்பத்தலைவரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

அவர் தனது மனைவியுடன் வேலைக்குச் செல்ல ஆயத்தமானபோது முகமூடி அணிந்து கூரிய ஆயுதங்களுடன் காரில் வந்தவர்கள், வீட்டுக்குள் புகுந்து வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் குருதி வெள்ளத்தில் கிடந்த அவர், அயலவர்களின் உதவியுடன் உடனடியாக நீர்கொழும்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் ஏற்கனவே அவர் உயிரிழுந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த உயிரிழந்தவரின் மனைவி (வயது -25) மயக்கமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இளம் தம்பதியினருக்கு இரண்டு வயதில் ஓர் ஆண் குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்றபோது குறித்த குழந்தை அயல் வீடான தாத்தாவின் (உயிரிழந்தவரின் தந்தை) வீட்டில் இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடன்பகையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஒ-22)




**மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. அப்பிடி ஒரு மூர்க்கமான முதலை மாதிரி முதலே பிளான் போட்டுத்தான் தையிட்டியில பொலிஸ்காரர் வெறியாட்டம் ஆடினவை. அங்க ஆக்களை அரஸ்ட் பண்ணின பொலிஸ்காரர் அம்புகள்தான். அவையை ஏவிவிட்ட அங்கத்தை 'ஏரியா பொலிஸ் பெரிய ஆள்' தான் உந்தப் பிரகண்டத்துக்கெல்லாம் மூலகாரணம்.**

**ஏற்கனவே அந்த 'ஏரியா பொலிஸ் பெரிய ஆள்' கடும் இனவாதி. அதோட ஆள் கடும் மூர்க்கனும். ஒரு கொலைக் கேஸூம் இன்னும் ஒன்பது மனித உரிமை மீறல் கேஸூகளும் அந்த அதிகாரி மேல இப்பவும் கோர்ட்ஸில நடக்குது. அதால அவர் பொலிஸ் ஸ்ரேசனில இருக்கிறதை விடவும் உந்த வழக்குகளுக்காக கோர்ட்ஸ் படியேறுறது தான் கூடவாம். அப்பிடிப்பட்ட மூர்க்கமான ஆள் இந்தமுறை தையிட்டியில போராட்டம் நடந்தால், முன்னணிக்காரருக்கு ஒரு பாடம் படிப்பிப்பன் எண்டு தனக்கு கீழ வேலை செய்யிற பொலிஸ்காரருக்குச் சொன்னவராம். சொன்னமாதிரி நேற்றுப் போராட்டம் நடக்கேக்க, ஈவிரக்கமில்லாமல், சட்டத்துக்குப் புறம்பா ஒன்பது பேரை அரஸ்ட் செய்திருக்கிறார். அவை என்ன குற்றம் செய்தவை? றோட்டை மறிச்சுக் கூட ஆர்ப்பாட்டம் பண்ணேலை. விகாரையை நெருங்காதபடி பொலிஸ்காரர் ஏற்கனவே முள்ளுக்கம்பி அடிச்சு, தடை போட்டதால போராட்டக்காரர் கொஞ்சம் தள்ளியிருந்த ஒரு தனியாரின்ர காணிக்குள்ள தான் அமைதியாப் போராட்டம் செய்தவை. அந்தப் போராட்டத்தால ஒருத்தருக்கும் ஒரு இடைஞ்சலும் இருக்கேலை. அப்பிடியிருக்க உந்தப் பொலிஸ் மேலதிகாரி இலங்கையில இல்லாத சட்டத்தயெல்லாம் அங்க போட்டிருக்கிறார்.**


**'ஆர்ப்பாட்டம் செய்யிற ஆக்களிட்ட போய் ஆர் கதைச்சாலும், அது மீடியாக்காரரா இருந்தாலும் கூட உள்ளுக்க தூக்கிப் போடுவன்' எண்டு புதுச் சட்டமெல்லாம் போட்டிருக்கிறார். அதோட கைது செய்த ஒன்பது பேரையும் நீதிமன்றத்தில கொண்டு போய் நிப்பாட்டாமல் நேற்று இரவிரவா பொலிஸ் ஸ்ரேசனில வைச்சிருந்திட்டு, பிறகு சட்டமருத்துவ அதிகாரியிட்ட கொண்டு போய் செக் பண்ணிட்டுத் தான் கோர்ட்ஸூக்கு கொண்டு போகப்போகினம். இத்தனைக்கும் கைது செய்யப்பட்டவையில ஒரு பெண் ஊடகவியலாளரும் உள்ளடக்கம். பெண் எண்டால் பேயும் இரங்கும். ஆனால் இஞ்ச பேயை வெண்ட ஆளெல்லோ பொலிஸில இருக்கு. முன்னணிக்காரருக்கு பாடம் படிப்பிச்சால், மேலிடத்தில தனக்கு நல்லபேர் கிடைக்கும், தனக்குப் போட்ட வழக்குகளில கொஞ்சம் குறையும் எண்டுகூட அந்த அதிகாரி கணக்குப் போட்டிருக்கலாம். ஆனால் எல்லாக் கணக்கும் சரியா வராது கண்டியளோ.**

**பிழையான இடத்தில கைவைச்சதால, கணக்கும் பிழைக்கலாம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 24
கொழும்புத்துறை மேற்கு வதிரீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் அடுத்த மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-17)

++++

யாழ்ப்பாணம், மே 24
சித்தங்கேணி - பெரியவளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
சப்பறத்திருவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமையும் தேர்த்திருவிழா இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமையும் மற்றும் மூன்றாம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளார். (ரி)

++++

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
அடுத்த மாதம் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 1 மணிக்கு பச்சை சாத்துதலும் இடம்பெறும் எனவும் மூன்றாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ரி)

++++

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
ஜூன் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் மூன்றாம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என பரிபாலன சபையினால் தெரிவிக்கப்பட்டது. (ரி -63)

# தான்தோன்றீஸ்வரருக்கு ராஜகோபுர குடமுழுக்கு

முல்லைத்தீவு, மே 24
ஒட்டுசுட்டானில் எழுந்தருளியுள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 11.10 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.
கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கர்மாரம்ப கிரியைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 29, 30, 31 ஆம் திகதிகளில் - மூன்று நாள்கள் - எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
தொடர்ந்து ஜூன் மாதம் முதலாம் திகதி சுயம்புலிங்கப் பெருமானுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் நவதள ராஜகோபுரத்துக்கும் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவுள்ளது.
அடியவர்கள் அனைவரும் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகைதந்து இறையருளைப் பெறுமாறு ஆலய முகாமைத்துவ சபையினர் அறிவித்துள்ளனர். (ச-19)



## வீரகத்தி விநாயகருக்கு தேர்த்தரிப்பிடம்

யாழ்ப்பாணம், மே 24
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் தேர்த் தரிப்பிடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
அதேவேளை ஆலயத்துக்கு புதிதாக சித்திரத்தேர் அமைக்கப் பட்டுள்ளதுடன் வெள்ளோட்டம் விரைவில் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ச-17)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், மே, 24
சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தின் பிரதம குரு முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் இந்தியாவின் தமிழகம் தருமபுரம் ஆதீனத்தின் அதி உயர் விருதான சிவாகம கலாநிதி என்ற சிறப்பு விருதும், பொற்பதக்கமும் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (ரி- 66)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மே 24
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிர வார சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.
சைவப்புலவர் செ. த. குமரன் "உள்ளம் பெருங் கோயில்" எனும் தொனிப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ரி)



## போரிஸ்க்கு 58 ஆவது வயதில் 8 ஆவது குழந்தை

பாரிஸ், மே 24
பிரிட்டன் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தனது 58 ஆவது வயதில் எட்டாவது குழந்தைக்கு தந்தையாகியுள்ளார்.
இந்தத் தகவலை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.
அதனையடுத்து அந்த நாட்டு மக்கள் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.
அண்மையில் போரிஸ் ஜோன்சனின் மனைவி கேரி ஜோன்சன், புதிய உறுப்பினர் ஒருவர் ஓரிரு வாரத்தில் எங்கள் வீட்டில் இணையவுள்ளார் எனப் பதிவிட்டிருந்தார்.
இவர்களுக்கு ஏற்கனவே ஒரு வயது மகளும் மூன்று வயது மகனும் உள்ளனர்.
இவருக்கு முன் மரினா வீலர் மற்றும் ஹெலனைத் திருமணம் செய்துகொண்ட போரிஸ் ஜோன்சனுக்கு 5 குழந்தைகள் உள்ளனர்.
இந்தநிலையில் தனது 8ஆவது குழந்தைக்குத் தந்தையாகியுள்ள போரிஸ் ஜான்சனுக்கு அந்நாட்டு மக்கள் பலரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பெருமை உண்டு. மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். லாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் தொல்லை களும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும். கவனம் தேவை.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்தகாரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தவறான முன்னுதாரணம்

**பொ**துப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரான ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியிலிருந்து தூக்கியெறியும் செயற்பாடுகள் ஆளும் பெரமுனவினரால் நாடாளுமன்றத்தில் இன்று முன்னெடுக்கப்படவிருக்கின்றன. அரசாங்கத்தின் சீரற்ற சட்டங்களையும் திட்டங்களையும் எதிர்த்து மக்களுக்காக மக்களுடனே நின்ற ஜனக ரத்நாயக்கவின், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் என்ற பதவி, நாடாளுமன்றத்தில் இன்று கொண்டுவரப்படவுள்ள பதவி நீக்கல் தீர்மானத்தின் அடிப்படையில் அவரிடம் இருந்து பறிக்கப்படவிருக்கின்றது. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலங்களில் இருந்த பெரும்பான்மைப் பலம் தற்போதைய 'ரணில் தலைமையிலான' பெரமுனவினருக்கு இல்லையெனினும், ஒரு தீர்மானத்தை பிறிதொரு கட்சியின் தரப்பின் ஆதரவில்லாமல் நிறைவேற்றும் வல்லமை இன்னமும் பொதுஜன பெரமுனவின் வசமே இருக்கின்றது. ஆதலால், ஜனக ரத்நாயக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைமைப் பதவியை இழக்கப்போவது உறுதி.

ஜனக ரத்நாயக்கவிடம் இருந்து பதவி பறிக்கப்படுகின்றமைக்கு வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாக மக்களாகிய நாம்தான் உள்ளோம். ஏனெனில், அவர் அரசியல் கட்சியின் பிரதிநிதியல்ல. தேர்தல் வேட்பாளருமல்லர். சுயாதீன ஆணைக்குழுவொன்றின் தலைவரே அவர். மின்சாரக் கட்டணத்தை கண்மூடித்தனமாக உயர்த்தவேண்டாம் என்று ஜனக ரத்நாயக்க அரசாங்கத்தை எதிர்த்து நின்றமை அவருக்காகவோ அல்லது அவர் குடும்பத்தினருக்காகவோ அல்ல. மக்களுக்காக! மக்களுக்காக மட்டும்தான். அவரின் இந்த நேர்மையும், அரசாங்கத்தின் வஞ்சகத்தனமானதும் யதார்த்தப் பிறழ்வானதுமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தமையாலும்தான் அரசாங்கம் ஜனகவை பதவிநீக்கம் செய்ய முடிவெடுத்து இன்று அதைச் செயற்படுத்துகின்றது.

உண்மையில், பொதுமக்கள் சரியான ஜனநாயகவாதிகளாகவோ அல்லது நேர்மையான குடிமக்களாகவோ இருந்திருந்தால் என்ன செய்திருக்கவேண்டும்? ஜனகவின் பதவி நீக்கத்துக்கு எதிராக பொதுமக்கள் தமது பிரதேசங்கள் தோறும் – மாவட்டங்கள் தோறும் போராட்டங்களை நடத்தியிருக்க வேண்டும். தத்தமது பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனகவின் பதவி நீக்கத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து அவரின் பதவியைக் காப்பாற்றுங்கள் என்று கோரிக்கையை விடுத்திருக்கவேண்டும். ஆனால், 'தேள் கொட்டிய திருடன் போல்' மக்கள் இந்த விடயத்தில் எந்தத் துலங்கல்களும் ஆற்றவில்லை. ஒட்டுமொத்தச் சுயநலனின் பிரதிகளாகத்தான் ஒவ்வொருவரும் உலவிக் கொண்டிருக்கின்றனர்.


மக்கள் மட்டுமல்ல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினரும், இதர எதிர்க்கட்சியினரும், சமூக அமைப்பினரும், சிவில் செயற்பாட்டாளர்களும்கூட ஜனகவின் பதவி பறிக்கப்படுகின்றமைக்கு வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களே. தேர்தல்கள் வேண்டும் என்றும் இதர அரசியல் கோரிக்கைகளுக்காகவும் மக்களைத் திரட்டிப் போராட முடிந்த இவர்களால், ஜனகவின் பதவிநீக்கத்துக்கு எதிராக பலமான எதிர்ப்பொன்றை வெளிப்படுத்த முடியவில்லையே அது ஏன்? எதிர்க்கட்சிகளின் இந்தக் கள்ள மௌனம் அரசாங்கத்துக்குத் திரைமறைவில் வழங்கும் ஆதரவுக்கரமா? என்ற நியாயமான சந்தேகமும் எழாமலில்லை.

எல்லாவற்றையும்விட, தவறான ஒரு முன்னுதாரணத்தைத்தான் ஜனகவின் பதவி நீக்கம் தந்து நிற்கின்றது. சுயாதீனத் திணைக்களங்களின் தலைவர்களாக இருந்தாலும், அவர்கள் அரசாங்கத்தின் திறனற்றதும் தவறானதுமான கொள்கைகளை – சட்டங்களை – திட்டங்களை எதிர்க்கக்கூடாது. மீறி எதிர்த்தால் அவர்களின் பதவி பறிக்கப்படும். அவ்வாறு பறிக்கப்பட்டால், அவர்களைக் காப்பாற்ற எவரும் வரப்போவதில்லை. மக்களுக்காகக் குரல்கொடுத்தால் மக்களே நடுத்தெருவில்விடுவார்கள்என்பதுதான்அந்தபிறழ்முன்னுதாரணச் செய்தி. ஆணைக்குழுக்கள் சுயாதீனம் பேணவேண்டும், அரசாங்கத்தை எதிர்த்து நிற்கின்ற தலைமைகள் உருவாகவேண்டும் என்றெல்லாம் வீரவசனம் அடுக்கிச்செல்லும் நாம், ஜனகவைக் கைவிட்டது ஏன்?

### நாளொரு நல்வார்த்தை

"மிகவும் அருகில் பார்த்தால் வாழ்க்கை சோகமானது. அதையே சற்றுத்தொலைவில் இருந்து பார்த்தால் வாழ்க்கை நகைச்சுவை ஆனது"

**– சார்லி சப்ளின்**




# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்ப முற்பட்டதைக் கண்டிக்கின்றேன்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, மே 24**

**கொழும்பு பொரளையில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை குழப்ப முயன்றதைக் கண்டிக்கின்றேன் -இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நினைவேந்தல் நிகழ்வுகளை எந்த இடத்திலும் நடத்தமுடியும். அதற்கு வடக்கு, கிழக்கு, தெற்கு என்று வேறுபாடு கிடையாது. போரில் இறந்தவர்களின் உறவுகள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெங்கெல்லாம் நினைவேந்தமுடியும்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வை ஒரு குழுவினர் இனவாத நோக்கத்தோடு தடுத்து நிறுத்த முற்பட்டதைக் கண்டிக்கின்றேன்.

பயங்கரவாதிகளை எவரும் எந்த இடத்திலும் நினைவேந்தமுடியாது. ஆனால், போரில் இறந்த உறவுகளை அவர்களின் சொந்தங்கள் சுதந்திரமாக நினைவேந்தமுடியும். அதைத் தடுத்து நிறுத்த நாட்டில் எந்தச் சட்டத்திலும் இடமில்லை - என்றார். (ஒ-5,22)

## 7 சிங்களவர்கள் தடைகோரி தொடுத்த வழக்குத் தள்ளுபடி

### கனடா நீதிமன்று அதிரடி

கொழும்பு, மே 24

கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடைவிதிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கனடா நீதிமன்று தள்ளுபடி செய்துள்ளது.

இலங்கையில் நடந்த இனப்படுகொலைகளை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் கனடா ஒன்ராறியோ மாநிலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த நினைவேந்தல்களுக்குத் தடைவிதிக்க வேண்டுமென ஏழு சிங்களவர்களால் அண்மையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில் இந்த மனுவை ஒன்றாறியோ நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அதேவேளை ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காகக் கனடா தொடர்ந்து குரல் கொடுக்கும் என கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வலியுறுத்திய கருத்து பேசுபொருளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## தேர்தலை நிறுத்தி நாட்டை நிமிர்த்தினார்

### *ரணிலுக்கு புகழ்மாலை சூடும் திஸ்ஸ குட்டியாராச்சி*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நிறுத்தியாவது ஓரளவு இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

'உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. இப்போதும் மொட்டுக் கட்சி என்ற அடிப்படையில் நாம் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம். ஆனால், நிதி அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி அதற்குப் பணமில்லை என்கிறார். எம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தேர்தலை நிறுத்தியாவது ரணில் ஓரளவாவது இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார். அதை நாம் ஆதரித்தே ஆகவேண்டும். அதைவிடுத்து விமர்சனங்களை முன்வைப்பதை நாம் தவிர்க்கவேண்டும்' - என்றார். (ஒ-22)

**நாளை 25.05.2023**

**வியாழக்கிழமை**

**வைகாசி 11**

சுபநேரம் : 07.22 - 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52

**ஷஷ்டி விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சாமுவேல் தேவராணி

**திதி : பூர்வ பக்க பஞ்சமி**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 21.12.1950 | 04.06.2022 |



இதயம் என்னும் கோவிலில்
தெய்வமாய்
நிறைந்திட்ட ராணி
அக்காவே!
நம்ப முடியவில்லை ஓராண்டு
கடந்ததை மாதங்கள்
பன்னிரண்டு ஆனாலும்
எங்களால் இன்றுவரை
ஜீரணிக்க முடியவில்லை
உங்கள் பேரிழப்பால்
எம்மை அணைத்திடயாருமே
இல்லையே அக்கா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவில்**
**இரத்னராணி,**
**புஸ்பராணி**

(CS 50543)(K-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 . 05 . 1935 | 04 . 06 . 2022 |



யாழ். நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை. கொழும்பு. ஜேர்மனி ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவரும். தெல்லிப்பழையைச் சேர்ந்த முன்னாள் இளைப்பாறிய கடற்படை அதிகாரி - காலஞ்சென்ற திரு.முருகேசு சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியுமான

## அமரர் திருமதி சின்னதம்பி பொன்மலர்

**திதி: 24.05.2023**

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**உங்களை அன்புடன் நினைவு கூரும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

**சி.மனோகரன்**
**077 656 2575**

(cs 9323) AH-1)

## விலைக்கேள்விக்கான கோரல் (2023/01)
## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
## பொருள் விற்பனை, (தோண்டப்பட்ட சுண்ணாம்பு இடிபாடு)

1. மாகாண ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம். சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர் களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 3ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம். அகழப்பட்ட கற்களை ஆயுள்வேத வைத்தியசாலை அச்சுவேலி வளாகத்தில் மு.ப 11.00 முதல் பி.ப 2.00மணிவரை அதிபர் சான்றுபெற்ற பாடசாலை அச்சுவேலி (தொலைபேசி இல. 0213218494) அவர்களின் அனுமதி பெற்று பார்வையிடலாம்.
3. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை. மாகாண ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,. வடக்குமாகாணம் மீனாட்சி அம்மன் வீதி. பண்ணை யாழ்ப்பாணம். (தொலைபேசி இல: 021-2057102, தொலைநகல் 021-2057103) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் (மூலம்.பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்.வடக்குமாகாணம் மீனாட்சி அம்மன் வீதி பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப் படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 3ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்
6. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | கேள்வி ஆவணம் வழங்கும் / பெற்றுக்கொள்ளும் காலம் | | 2023-05.24 முதல் 2023-06.06 வரை | |
| | விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் | | 2023.05.31 அன்று பி.ப 2.00 | |
| | கேள்வி முடுதல்/திறத்தல் | | 2023-06.07 அன்று மு.ப 10.30 | |
| கேள்வி அடையாள இல | விற்பனை விபரம் | மீளளிக்கப் பாததொகை (ரூ) | கேள்விப் பிணைவிபரம் — தொகை (ரூ) | கேள்விப் பிணைவிபரம் — தேவைப்படும் காலம். |
| SALE/NP/PB/JA/01/ 2023 | ஏலவே அகழப்பட்டு கணிய அளவீடு செய்யப்பட்டு குவிக்கப்பட்டுள்ள (ஏறத்தாள 200 கியூப்) சுண்ணக்கற்களை வாகனத்தில் ஏற்றி தளத்திலிருந்து அகற்றி அப்புறப் படுத்தல். | 3000.00 | 50000.00 | 2023.08.23 வரை |
| SALE/NP/PB/JA/02/ 2023 | ஏலவே அகழப்பட்டு கணிய அளவீடு செய்யப்படாமல் எழுந்த மாறாக குவிக்கப்பட்ட சுண்ணக்கற்களை வாகனத்தில் ஏற்றி தளத்திலிருந்து அகற்றி அப்புறப்படுத்தல். | 3000.00 | 25000.00 | 2023.08.23 வரை |

**தவிசாளர்,**
**திணைக்களப்பெறுகைக்குழு,**
**நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,**
**வடக்குமாகாணம்,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை யாழ்ப்பாணம்.**

(cr.35498)(2.6)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS
## Procurement of Generator

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
   - Generator
     Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
   - Bidders shall have valid business registration
   - and business registration for supply of respective Works, Supplies and Service
   - Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance Circular No 4/2016(11)

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Condact No (021 2226253, 0212224966), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00 am to 3.00 pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 25.05.2023 to 09.06.2023 during 09.00 Hours to 15.00 Hours.

D. Bids must be delivered on or before 10.30 am of 12.06.2023 to the address given below or deposited in the tender box available at the Room of Additional Regional Director of Finance (TPM). Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

E. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118 days from the bid opening.

F. Pre bid meeting under following on 05.06.2023 at 10.30 am in RDHS Office Jaffna.

I. Procurement committee will be the right to make final decision in regard the accept or reject Bid

| Reference No | Item | Qty | Nonrefundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP /Generator/2023/01 | 250kVA Generator with 400 Amp Automatic Transfer Switch | 01 | 2,000.00 | 400,000.00 |
| NP/RDHS/PSSP /Generator/2023/02 | 400kVA Generator with 630 Amp Automatic Transfer Switch | 01 | 2,000.00 | 480,000.00 |

**Chairperson**
**Regional Procurement Committee**
**RDHS Jaffna**

(cr.35498)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரத்தில் குறைகிறது டெங்கு

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் தற்போது குறைவடைந்துள்ளது என யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் 21 பேர் மாத்திரமே டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் டெங்கின் தாக்கம் மேலும் குறைவடைய வாய்ப்புள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பம் மற்றும் வறட்சியான காலநிலை ஆகியவற்றால் நுளம்புகளின் பெருக்கம் குறைவடைந்துள்ளது.

எனினும் டெங்குக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழித்து துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் மேலும் அறிவுறுத்தியுள்ளனர்.

(ச-17)

# அடர் காட்டுக்குள் நடந்த திருமணம்

கொழும்பு, மே 24

அநுராதபுரம் மாவட்டத்தின் பதவியவில் உள்ள விவசாயி ஒருவர் தனது மகனின் திருமணத்தை கடந்த 21ஆம் திகதி அடர்ந்த காட்டுக்குள் நடத்தியுள்ளார்.

பதவிய - புல்மோட்டை வீதி, உறுவ பிரதேசத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில், கொஹொம்பிட்டிய குளத்துக்கு அருகில் திருமண ஏற்பாடு செய்யப்பட்டது. மணமகனும், மணமகளும் அமர்ந்திருந்த நாற்காலியும் காட்டில் கிடைத்த பொருள்களைக் கொண்டு அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

இந்தத் திருமண விழாவில் டோலக், தபேலா மற்றும் பியானோவைப் பயன்படுத்தி மெல்லிசை இசைக்கப்பட்டது. பெரிய சத்தமாக இசை ஒலிக்கவிடப்படவில்லை. காடுகளை நேசிக்கும் விவசாயியான மணமகனின் தந்தை சமந்த பிரேமலால் தனது மகனின் திருமண விழாவை காட்டின் நடுவில் நடத்த ஏற்பாடு செய்தார். காடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(ஒ-இ)

# தாவரவியல் பூங்காவுக்கு நுழைவுக் கட்டணம் உயர்வு

கொழும்பு, மே 24

தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வரும் என சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய உள்ளூர் நபரொருவருக்கு 200 ரூபாவும், சிறுவர்களுக்கு 30 ரூபாவும் கட்டணம் வசூலிக்கப்படும்.

அதேவேளை வெளிநாட்டவருக்கு நுழைவுக் கட்டணம் 3,000 ரூபாவாகவும் வெளிநாட்டுச் சிறுவர்களுக்கு 1,500 ரூபா வசூலிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## 06 பரப்பு 09 குழி காணி, வீடுடன் விற்பனைக்கு உண்டு

- வல்லை, தெல்லிப்பளை, அராலி வீதியில் 04 ஆவது Km.
- அச்சுவேலி நகரப்பகுதியிலிருந்து 1500m இல் அமைந்துள்ளது.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம். குடியிருப்பு நல்ல சூழல் உள்ள காணி.
- குழாய்க்கிணறு உண்டு. தோட்டம் செய்யும் வசதியுண்டு.
- தென்னை, தேசி, மாங்கன்று, போன்ற பல பயிர் கொடிகள் உண்டு.
- மூன்று அறையுடன் கூடிய 37 அடி வீடு உண்டு.
- வாகனத்தரிப்பிடம் உண்டு.

தரகர் தேவையில்லை (CS 24950)(K-1)

தொ.பே.இல : 077 218 3674

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர்
நலன்புரிச் சங்க அங்கத்தவர்
திருமதி நி.மயூரா அவர்களின் அன்புத் தந்தை



### பரமு மகேந்திரன்

அவர்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுள் வேத மருத்துவர் நலன்புரிச் சங்கம்.**

(CS 25052) A-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோண்டாவில் வாழ் பிரபல சமூக சேவையாளரும், கல்விக் கொடையாளருமாகிய

**செங்கைப்புரவோன்**

**உயர்திரு. இராசையா குவேந்திரநாதன்**

அவர்கள்

சமூக சேவைகளில் சிறப்பான பணிகள் ஆற்றியமையை அங்கீகரித்து, மக்களின் பாதுகாப்பிற்கான மனித உரிமைகள் அமைப்பால், (Human Rights Organaization for Security of People)

**சாமஸ்ரீ சமூக ஜோதி விருது**

**20.05.2023** ல் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இந்தியா மதுரைமாவட்ட உசிலம்பட்டி தமிழக மாநில சட்டசபைப் பிரதிநிதி (MLA) கௌரவ. P.**ஐயப்பன்** அவர்களால் வழங்கப்பட்டமையை நாமும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**விஸ்ரா விஷன்**
**யாழ்ப்பாணம்.**

(cs 50542) (N-1)

## கேள்வி அறிவித்தல்

### சபைநிதி -2023

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

01. சபைநிதி - 2023 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு **பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C9/C8/ C7 தரத்தில் வீதி அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு** (தொலைபேசி: 021 229 1023 e.mail pkipsmullai@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணிவரை 24.05.2023 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 24.05.2023 ம் திகதியிலிருந்து **06.05.2023 ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **3000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு** 07.05.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (23.08.2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Cap./W-01/2023 | THE RENOVATION OF 4TH UNIT 4TH CANEL 5H KILAI ROAD AND PULIYANKULAM ALAIKARAI ROAD IN PANDARAVANNI WARD IN ODDUSUDDAN, MULLAITIVU REGION | 3.04 | 91 நாட்கள் | C9/C8/C7 | 50,000.00 | 20/06/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-02/2023 | THE RENOVATION WORKS OF FC21 ROAD, NETHTHALIYARU SCHOOL ROAD, THERAVIL ILLANKOPURAM LINK ROAD, ILANKOPURAM MAIN ROAD, THERAVIL MAIN ROAD | 3.74 | 91 நாட்கள் | C9/C8/C7 | 50,000.00 | 20/06/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-03/2023 | THE RENOVATION OF FIRST LANE OF 1/2 ACER AT THIRUMURYKANDY AND THE CONSTRUCTION OF 610MM DIA 6.1M LONG HUMP PIPE CULVERTS IN THIRUMURYKANDY WARD | 1.4 | 91 நாட்கள் | C9/C8/C7 | 20,000.00 | 20/06/2023 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, **புதுக்குடியிருப்பு** அலுவலக கட்டடத்தில் 29.05.2023 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.

12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு**
**24.05.2023**

(cr.39891) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில் டெங்குச் சோதனை

# 28 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

**யாழ்ப்பாணம், மே 24**

**யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனையில் 28 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். நகரப்பகுதிகளில் இரண்டு நாள்கள் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் ஆயிரத்து 271 குடியிருப்புக்கள் தரிசிக்கப்பட்டன.

வண்ணார்பண்ணையில் ஜே/100 கிராமஅலுவலர் பிரிவில் கடந்த 16ஆம் திகதி 559 குடியிருப்புக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

சோதனையின்போது நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 28 குடியிருப்புக்கள் கண்டறியப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

மறுநாள் 17ஆம் திகதி குருநகரில் ஜே/68 கிராமஅலுவலர் பிரிவில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் ஐந்து குடியிருப்புக்கள் சுகாதாரமற்றுக் காணப்பட்ட நிலையில் அவற்றை உடனடியாக துப்புரவு செய்யுமாறு சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டது. (ச-17)

# மாட்டுவண்டிச் சங்கம் ஆரம்பமும், மதிப்பளிப்பும்

முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவு மாவட்ட மாட்டுவண்டில் சாவரி சங்கம் வடமாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டு விசுவமடு தொட்டியடி சவாரித் திடலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



சங்கத்தின் தலைவர் லோகநாதன் சயேந்திரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் திணைக்கள அதிகாரி முகுந்தன் மற்றும் கிளை மாட்டு வண்டில் சவாரி சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சவாரிச்சங்கம் வடமாகாணத்தில் பதிவு செய்வதற்காக உழைத்த உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை விசுவமடு தொட்டியடி கிராமத்தில் இயங்கிவரும் லாலா றஞ்சன் கராட்டிக் கழகத்தில் தற்காப்புக் கலை பயின்று வரும் மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் சீருடைகள் வழங்கிவைக்கப்பட்டன. (ய-19)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 24.04.2023 (திங்கட்கிழமை) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் செல்லையா கந்தசாமி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று மதியம் எமது இல்லத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 26.05.2023 (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் இல. 37, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**சேர் பொன் இராமநாதன் வீதி, குடும்பத்தினர்**
**யாழ்ப்பாணம்.**
**077 116 8999**

(cs 50541) (N-1)



## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 2023

### வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல்

- உணவகம் (ஹோட்டல்) சர்பத் கடை தவிர்ந்த ஏனைய உணவு கையாளும் நிலையங்கள் (ஐஸ்கிறீம் கடை, ஐஸ்கிறீம் வாகனம், பூந்தி இனிப்பு வகைகள் மற்றும் மிக்சர் கடைகள்) இவை அனைத்தும் தத்தமது பிரதேச உள்ளூராட்சி சபைகளின் அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஐஸ்கிறீம் உணவகங்கள், தேநீர், பூந்தி இனிப்பு, மிக்சர், சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்
- சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனுமதி பெற்ற ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரமே ஐஸ்கட்டிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். அத்துடன் அதற்கான பற்றுச்சீட்டை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்
- உணவகத்திற்கும் சர்பத் கடைகளிற்குமான உரிமையாளர்கள் சனிக்கிழமை (03.06.2023) மாலை 04.00 மணிக்கு வற்றாப்பளை பொது சுகாதார பரிசோதகர் உற்சவகால அலுவலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கட்டாயம் பங்குபற்றுதல் வேண்டும்
- காவடி உரிமையாளர்கள் அயடின் கரைலில் செடில்களை கட்டாயமாக கழுவி பயன்படுத்த வேண்டும்
- சிகரேட், புகையிலை, மதுசாரம் ஆலய வளாகத்தினுள்ளே வியாபாரம் செய்வது தடை.

**மேலும் தொடர்புகளிற்கு**

பொது சுகாதார பரிசோதகர் : 077-2054320 / 077-1211880

மேலும் 16.05.2023ம் திகதி செய்தித்தாளில் பிரசுரித்த சேவைகளிற்கான விலைமனுக்கோரலில் மின்ஒளிச் சேவைக்கான இறுதித்திகதி தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 26.05.2023 என முற்திகதியிடப் பட்டுள்ளது எனவே அன்றைய தினம் பிப 03.00 மணிக்கு முன் மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன் நாட்டப்பட்ட மின்கம்பங்களை மீள உரிய இடத்தில் கழட்டி ஒப்படைப்பதற்கான விலைகளை உள்ளடக்கியதாக கேள்வி மனுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஏனைய சேவைகள் தொடர்ந்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன் படி செயற்படுத் தப்படும்.

**பெறுநர்**
**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்**
**மாவட்ட செயலகம்**
**முல்லைத்தீவு.**

(CR39895) (N-1)



## மரண அறிவித்தல்



தோற்றம் 01 • 03 • 1947

மறைவு 22 • 05 • 2023

## திருமதி சிவஞானாம்பிகை (தேவி) முருகேசபிள்ளை

(ஓய்வுநிலை இலிதர் சேவை 1 ஆம் வகுப்பு)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி சிவஞானாம்பிகை (தேவி) முருகேசபிள்ளை (ஓய்வுநிலை இலிகிதர் சேவை 1 ஆம் வகுப்பு) நேற்றுமுன்தினம் (22.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (ஆசிரியர்) திரு.மு.கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான திரு.பழனித்தம்பி - கொங்காத்தை தம்பதியரின் அன்பு மருமகளும், திரு.ப.முருகேசபிள்ளை (ஓய்வுநிலை இலிகிதர் 1ஆம் வகுப்பு) அவர்களின் அன்பு மனைவியும், அனிந்திதை, நக்கீரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு.பிரேமானந், திருமதி பிரபா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு.மு.க.சிவபாதவிருதயர் (ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி - வட பிராந்தியம்), திரு.க.சிவகடாட்சம் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற திரு.க.சிவகுமாரன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் - மட்டக்களப்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருமதி பூபதிப்பிள்ளை . திரு.ப.தெய்வநாயகம் மற்றும் திரு.ப. கிட்ணபிள்ளை, திரு.ப.குணசேகரன், திருமதி சி.பிரேமலதா, திருமதி சி.பத்மாசனி (தவம்), திருமதி சி.சிவகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மயூரியின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**


**"சிவகுல வாசா"**
**அல்லைப்புலம் வீதி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**

**குடும்பத்தினர்**
**077 216 0030**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 06 . 1949



மறைவு
23 . 05 . 2023

## வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்

(உரிமையாளர் - சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)

வெற்றிலைக்கேணியை பிறப்பிடமாகவும், V.M. றோட் பருத்தித் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வே.இரத்தினசிங்கம் நேற்று (23.05.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இதய குமார், காலஞ்சென்ற சதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதியின் மாமனாரும், வேணுஜனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற் பகல் 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


வி.எம்.றோட், பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 927 6853

(CS 24706) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 03 . 1942



மறைவு
22 . 05 . 2023

## செல்லையா தர்மலிங்கம்

ஓய்வுபெற்ற அவசர சிகிச்சை மருத்துவச்சாரதி

கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ். மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அவசர சிகிச்சை மருத்துவச் சாரதி செல்லையா தர்மலிங்கம் அவர்கள் கடந்த (22.05.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா தம்பதியரின் அன்புப் புதல்வரும் இலச்சுமிப்பிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் (ராசன் -ஜேர்மனி), ஸ்ரீபாஸ்கரன் (செல்வா வீடியோ - சுவிஸ்), ஸ்ரீபரன் (குமார்- பிரான்ஸ்), ஸ்ரீவிக்கினராஜா (பாபு - சுவீடன் ), ஸ்ரீமயூரன் ( அருள்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலராதா (ராதா - ஜேர்மனி), பிரிய தர்சினி (பிரியா -சுவிஸ்), பவானி (பிரான்ஸ்), பிரியந்தி (சுவிடன்), தேனுகா (தேனு- பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அயந்தன், கீர்திகா, ஆதித்தியன், தேனுகா, அனித், ஓவியன், துர்க்கா, அனுஷா, டிக்சனா, அக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், தேஜர்ஸ்வி, கிரிஸ்வி ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு:-
மகன் பாபு - 075 780 8962
மகன் செல்வா - 075 371 1186


(CS 25051) A-1

# 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் திரு. நாகமணி பூபாலசிங்கம் (பூபாலு)

பிறப்பு
04.02.1944

இறப்பு
24.04.2023



கடந்த 24.04.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் நாகமணி பூபாலசிங்கம் (பூபாலு) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல் மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்-

மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விருப்பங்கள் விமர்சனங்கள் அல்ல’



## மிடுக்குடன் வெளிப்படும் ஈழத்தமிழ்ச் செய்தியிடல் முறை

அ.நிக்ஸன்

ஈழத் தமிழர்களின் அரசியல் விவகாரத்தை இந்தியா 1987ஆம் ஆண்டில் கையாண்ட முறையின் பெறுபேறுகள் பல எதிர்வினைகளுக்குக் காரண காரியமானது என்ற தொனியை ‘நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்’ என்ற தனது செய்தி அனுபவப் பகிர்வு நூலில் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எடுத்துரைக்கிறார்.

தமிழ்ப் பத்திரிகை உலகின் புதுமைப் பித்தன் மூத்த செய்தியாளர் மாணிக்கவாசகம், போர்க் காலத்தில் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி இருந்தவர். ஆனால் அவருடைய செய்தி எழுத்தின் மதியுகமும், விதியை மதியால் வெற்றி பெறக்கூடிய சாமத்தியமும் அவரது உயிரைக் காத்தது எனலாம். ஆனால் நோயின் பிடியில் சிக்கியபோது, மரணத்தை எதிர்பார்த்த ஒரு நிலையில், தனது செய்தி அனுபவங்களையும் ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர்நோக்கிய சிக்கல்கள், இந்திய - இலங்கை அரசுகளின் அணுகுமுறைகளினால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி ஆதாரங்களுடன் எதிர்காலத் தமிழ்ச் சந்ததிக்குரிய வரலாற்றுப் பொக்கிசம் ஒன்றை நூலாகப் படைத்து விட்டுச் சென்றிருக்கிறார்.

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத 1983 இல் ஈழநாடு பத்திரிகை மூலமாகச் செய்தித்துறைக்குள் கால் பதித்த மாணிக்கவாசகம், தகவல் தொழில்நுட்பம் அதி உச்சத்தில் வளர்ச்சியடைந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மரணிக்கும் வரை பணியாற்றியிருக்கிறார். அதாவது எழுதிக்கொண்டே இருந்தார். வயதானவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவு இருக்காது என்பர். அல்லது வயதானவர்கள் அதனைக் கற்கவே முடியாதென்பர். ஆனால் இவருக்குப் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் அத்தனை செயல்முறைகளும் நன்கு பரீட்சையமாக இருந்தன. இதன் பிரகாரம் இந்த நூல், மாணிக்கவாசகத்தின் இதழியல் வகிபாகம் மற்றும் செய்தி ஒன்று எவ்வாறு கருவாகி - உருவாகி மலர்கிறது என்கிற வரையறையும், செய்தியின் தன்மைகள் பற்றியும் எடுத்துரைக்கிறது.

அதாவது செய்தியாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூக வகிபாகத்தையும் அதற்கான அர்ப்பணிப்பையும் இந்த நூல் புடம்போட்டுக் காண்பிக்கிறது. 66 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள அவருடைய செய்தி அனுபவம் ஒவ்வொன்றும், உறுதியான நியாயமான தகவல்களை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் செய்தி பற்றிய எல்லா விளக்கங்களையும் உள்ளடக்கித் தரும் முறையிலும் நூல் அமைந்துள்ளது. குறிப்பாகச் செய்தி ஒன்றை, ஒரு கருத்து, ஒரு நிகழ்ச்சி, சிக்கல் பற்றிய உண்மையான, சரியான, சமநிலையான குறிப்பு, நேர்மையானதாக, நிகழ்காலத்தோடு தொடர்புடையதாக, மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான விளக்கங்களாகவும் அமைந்துள்ளன.

உதாரணமாகத் ‘திசைமாறிய சமாதான முயற்சி’, ‘மோதல்களும் இருபக்க உயிர்ப்பலிகளும்’, ‘வடக்குக் கிழக்கு மாகாண சபையும். இந்திய அமைதிப் படையின் வெளியேற்றமும்’, ‘இந்தியத் தேசிய பாதுகாப்பும் இலங்கை விவகாரத் தலையீடும்’ என்ற தலைப்புகளிலான கட்டுரைகளைக் குறிப்பிடலாம். ‘இந்தியாவின் ஒதுங்கியிருந்து செயற்படுகின்ற போக்கு’ என்ற தலைப்பிலான கட்டுரை மற்றும் இந்தியா பற்றிய ஏனைய சில கட்டுரைகள் ஊடே இலங்கை விவகாரத்தில் இந்திய இராஜதந்திரத்தின் தோல்வி என்ற தொனி வெளிப்பட்டுள்ளது.

ஆனால் மாணிக்கவாசகம் அவ்வாறு நேரடியாக எழுதவில்லை. சம்பவங்கள், இந்திய அமைதிப்படை வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த காலச் செயற்பாடுகள் பற்றிய செய்திகள், குறிப்புகள் மூலம் இந்திய இராஜதந்திரத் தோல்வி என்பதை மாணிக்கம் நாசூக்காக உணர்த்துகிறார்.

தன்னுடைய விருப்பங்களை விமர்சனங்களாக அவர் முன்வைக்கவில்லை.



செய்தி என்ற சொல்லுக்குப் பலர் இலக்கணம் வகுக்க முயன்றனர்.

ஆனால் எந்த இலக்கணமும் முழுமையானதாக அமையவில்லை. செய்திக்குத் தரும் விளக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. செய்தி ஒன்றுக்கு வழங்கப்படும் விளக்கத்தைத் தொகுத்துக் கூறலாம். ஒன்று, எதனையாவது வெளிக்காட்டுவது செய்தி. இரண்டாவது, சாதாரணமானவற்றிலிருந்து மாறுபட்ட எதுவும் செய்தியாகும். மூன்றாவது, ஒரு சமுதாயத்தில் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்ற, அவர்களால் புரிந்து கொள்ளக்கூடிய எந்த ஒரு நிகழ்ச்சியும், கருத்தும் செய்தியாக உருவம் பெறுகின்றன. ஆகவே செய்திக்குரிய இந்த விளக்கத்தின் பிரகாரம், ‘புத்தர் சிலை வடிவில் வந்த பேரின ஆக்கிரமிப்பு’, ‘பண்டார வன்னியன் நினைவாக’ ‘கூசைதாசனின் சீற்றம்’ என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள செய்திக் கட்டுரைகளைக் கூறலாம். 1982இல் வவுனியாவில் புத்தர் நிலை வடிவில் பேரினவாத ஆக்கிரமிப்பு என்று ஆரம்பிக்கும் கட்டுரையில், அப்போதைய தமிழர் அரசியல் நிலை பற்றிய சம்பவங்களை ஒப்புவிக்கிறார் மாணிக்கவாசகம்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் மறைமுக இனவாதங்கள், அதற்குரிய எதிர்வினையாகத் தமிழ் மன்னன் பண்டாரவன்னியனுக்குச் சிலை வைக்கும் தீர்மானங்கள் வரை கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல சம்பவங்கள், செய்திக்குரிய மூலப் பண்பை சுட்டி நிற்கின்றன.

செய்தியாளர் எது செய்தி என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பதைப் போல, செய்தி எங்கே கிடைக்கும் என்பதை அறிந்திருக்கவும் வேண்டும். பொதுவாக எப்பொழுதும் எங்கும் செய்திகள் கிடைக்கலாம். இருந்தாலும் சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றால் செய்திகளை எளிதாகவும் மிகுதியாகவும் பெற இயலும். அவ்வாறான இடங்களைச் செய்தி மூலங்கள் என்பர்.

வவுனியா தச்சன்குளம் விவகாரம் தொடர்பான செய்தியும் அதனுடன் தொடர்புடைய ‘அபகரித்த காணிகளைத் திருப்பித்தரலாம் தானே’ என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரையும் அதற்கு உதாரணமாகின்றன. 1983 ஜூலை மாதம்’ கொழும்பில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய நீண்ட தகவல்களும் மாணிக்கவாசகம் கொழும்பில் பெற்ற நேரடி அனுபவங்களும் செய்திக்குரிய நம்பகத்தன்மையுடன் கூடிய மூலமாகவே அமைந்துள்ளன.

சொல்ல வரும் சம்பவங்கள் பற்றிய சித்திரிப்புகளில் மாணிக்கவாசகம் தனது எதிர்பார்ப்புகளைப் புகுத்தவில்லை. நடந்தவற்றை ஆதாரங்களோடும் தன்னுடைய நேரடி அனுபவங்கள் ஊடாகவும் உண்மைத் தகவல்களை வெளிப்படுத்துகிறார்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் தொம்சன் பவுண்டேசனின் ஆசிரியர் குழுவின் ஆய்வு மையம் செய்தியாகக் கூடிய இருபது வகைகளைத் தொகுத்து வழங்கியுள்ளது. அந்த இருபது வகைகளில் புதுமையானது, மனிதத் தாக்கம், உள்ளூர் நடவடிக்கைகள், குற்றம், மோதல், சமயம், மனித ஆர்வமானவை, மர்மம், தேசிய இனம் போன்ற அம்சங்கள் முக்கியமானவை.

இந்த அம்சங்கள் மாணிக்கவாசகத்தின் நூலில் மிக ஆழமாகத் தென்படுகின்றன. இதற்கு இவருடைய மும்மொழித் தேர்ச்சியும் வழிசமைத்திருக்கின்றன. முழுமையான ஒரு செய்திக்குரிய அம்சங்கள் நூலின் ஒவ்வொரு பகுதியிலும் விபரமாகவும் சுருக்கமாகவும் பொருத்தமான இடங்களில் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு செய்தியிலும் தலைப்பு, முகப்பு, உடல் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. இவற்றைச் செய்தியின் கட்டமைப்பு என்று கூறலாம். செய்தியின் மையக் கருத்து அல்லது தலைமைக் கருத்து செய்தியின் தலைப்பில் இடம் பெற வேண்டும். இது தேசியமட்டச் செய்திகளுக்கு மாத்திரமல்ல, பிராந்தியச் செய்திகளுக்கும் பொருந்தும்.

அமெரிக்காவின் மூத்த செய்தியாளர் எச்.மார்னிஸ், செய்தி என்பதை ‘அவசர அவசரமாக நடைபெறும் வரலாறு’ என்று கற்பிதம் செய்கிறார். இப்படிப்பட்ட செய்தியைச் சுமந்து வரும் செய்தித்தாளை எப்படி வாசித்தாலும் எவ்வளவு நேரம் வாசித்தாலும் செய்திகளை வாசித்துப் புரிந்து கொள்ள முடிவதற்குக் காரணம், அவற்றை எழுதும் முறைகளே எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். மாணிக்கவாசகம் எழுதிய செய்திகளையும் அவருடைய செய்தி அனுபவம் குறித்த இந்த நூலையும் வாசிக்கும்போது அமெரிக்கச் செய்தியாளர் மார்னிஸ் சுட்டிக்காட்டிய விடயங்கள் பொருந்துகின்றன. ஆகவே இந்த நூல் தற்போதைய இளம் செய்தியாளர்களுக்கும், செய்தி ஊடகத்துறைக்கும் ஒரு பாடப்பரப்பாகவும் மற்றும் போர்க்கால ஆதாரங்களாகவும் விளங்குகின்றன. குறிப்பாக ஈழத்தமிழ் அரசியல் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் தகவல்களை இந்த நூல் தாங்கி நிற்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுத்திரதேவா படகு நேற்று மீண்டும் பழுது

யாழ்ப்பாணம், மே 24

நெடுந்தீவிலில் இருந்து நேற்றுக் காலை குறிகாட்டுவான் நோக்கிப் பயணித்த சமுத்திரதேவா படகின் சுக்கான் உடைந்த நிலையில், தனியார் மீன்பிடிப் படகுகளின் உதவியுடன் படகில் இருந்தவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சுமார் 70 பயணிகளுடன் பயணித்த சமுத்திரதேவா படகு, மலையடிப் பகுதியை அண்மித்தபோதே அதன் சுக்கான் உடைந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடமும் இவ்வாறான சம்பவம் பதிவாகியிருந்ததுடன், இது தொடர்பில் உரிய கவனத்தை துறைசார் அதிகாரிகள் எடுக்கவேண்டும் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-125)

## கொடியேற்றம்

வட்டுக்கோட்டை, மே 24

வட்டுக்கோட்டை துணவி தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சப்பறத் திருவிழாவும், எதிர்வரும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும், எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும், அன்றையதினமே மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம)

### ஓமந்தையில்...

பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். 52 வயதுடைய நபரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த நபர், தென்னந்தோப்பில் இருந்தபோது அவரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. தனிப்பட்ட முன்பகையே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம். துப்பாக்கிச் சூடு நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தாக்குதலுக்குப் பயன்படுத்திய துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

### 55 கிராம்...

யொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே சிறுமி கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் தனது உள்ளாடைக்குள் மறைத்து வைத்திருந்த 55 கிராம் ஹெரோய்ன் பெண் பொலிஸ் அலுவலர்களால் மீட்கப்பட்டுள்ளது. சிறுமி பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம)

### தையிட்டி...

யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தடைகள் மற்றும் முடிவுகளை மீறியும், சட்டவிரோதமாகவும் திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரைக்கு எதிராக தமிழர் தாயகத்தில் கடந்த சில தினங்களாக போராட்டங்களும் எதிர்ப்புக்களும் பதிவுசெய்யப்பட்டு வரும் நிலையில், நேற்றையதினமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டது.

#### தறப்பாள் கிழிப்பு

போராட்டத்துக்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது அந்த இடத்துக்கு வந்த பொலிஸார், உடனடியாக அங்கிருந்தவர்களை அப்புறப்படுத்தியதுடன், அந்தப் பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டால் கைதுசெய்வோம் என்று அச்சுறுத்தினர். அத்துடன், தனியார் காணிக்குள் இருந்து ஜனநாயக முறைப்படி போராட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலைபேசி பொலிஸாரால் பறிக்கப்பட்டதுடன், அவரை வேறு எவரும் சந்திக்க முடியாதவாறு முட்கம்பிகள் போடப்பட்டுத் தடையும் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இருவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

#### ஊடகங்களுக்குத் தடை

ஊடகங்களும் அந்தப் பகுதியில் நடமாடவோ அல்லது செய்தி சேகரிக்கவோ தடையேற்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் எச்சரித்தனர். கஜேந்திரனுடன் எவரும் உரையாட முடியாது. வேண்டுமென்றால் பொலிஸ் அதிகாரியொருவரை உடன் வைத்துக்கொண்டுதான் கருத்துக்களைப் பெறமுடியும் என்றும் கருத்துக்களைப் பெற்றதும் ஊடகவியலாளர்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேறிவிடவேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், ஊடகவியலாளர்கள் ஒளிப்படங்கள் எடுப்பதையும் பொலிஸார் தடை செய்ததுடன், ஊடகவியலாளர்களின் அடையாள அட்டைகளும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன. 'ஊடகங்களுக்கு நாம் பயப்பிடப்போவதில்லை. ஊடகங்களும் போராட்டக்காரர்களும் ஒன்றுதான்' என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கஜேந்திரனுடன் எவரும் கதைத்தால், கதைப்பவர் ஊடகவியலாளராக இருந்தாலும் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் எச்சரித்தனர்.

#### சுகாஷும் கைதானார்

கஜேந்திரனைக் காண்பதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், சட்டத்தரணியுமான சுகாஷ் அந்தப் பகுதிக்கு வந்தபோது, அவருக்கு கஜேந்திரனைச் சந்திப்பதற்குத் தடை விதிக்கப்பட்டதுடன், வாக்குவாதங்களை அடுத்து அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், கஜேந்திரனுக்கு உணவு கொண்டு வந்தவர்கள், பொலிஸாரிடம் நீதிகேட்டவர்கள் என 9 பேர் நேற்றையதினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களில் பலர் நேற்று இரவு வரையில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### ஜூன்...

மாதம் 21ஆம் திகதியை 'கனடாவின் இனப்படுகொலை நாள்' என்றவாறாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கனேடியப் பழங்குடி மக்கள் ஜூன் மாதம் 21ஆம் திகதியை கனேடிய ஆதிவாசிகள் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளனர். ஆதலால், ஜூன் 21ஆம் திகதியை கனடாவின் இனப்படுகொலை நாளாக பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பை நான் கோருகின்றேன் - என்றார்.

இலங்கை இராணுவத்தினதும் அரசாங்கத்தினதும் போர்க்குற்றங்களுக்கு எதிராகக் கனடா கடும் போக்கைக் கைக்கொண்டு வருகின்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கனேடிய நாடாளுமன்றத்தில், 'இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னரும் இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன' என்று தீர்மானமொன்றை நிறைவேற்றியது. அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச மற்றும் இராணுவப் பின்புலம்கொண்ட போர்க்குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்திய சுனில் ரத்நாயக்க, சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு கனடா பயணத் தடைகளையும் பொருளாதாரத் தடைகளையும் விதித்தது. இவ்வாறானதொரு பின்னணியில், இவ்வருட முள்ளிவாய்க்கால் படுகொலை நாளை முன்னிட்டு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகக் காட்டமான அறிக்கையொன்றை வெளியிட்டதுடன், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்காக கனடா தொடர்ந்து நீதிகேட்கும் என்றும் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஜூன் 21ஆம் திகதியை கனடாவின் இனப்படுகொலை நாளாகப் பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பை விமல் வீரவன்ஸ கோரியுள்ளார்.

இதேவேளை - கனடாவில் ஆதிவாசிகளும் பழங்குடியினரும் பல தசாப்தங்களுக்கு முன்னர் படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டமையை அண்மையில் வெளிப்படையாகவே ஏற்றிருந்த கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, இந்தப் படுகொலைகளுக்காக தனது வருத்தத்தையும் பகிரங்க மன்னிப்பையும் கோரியிருந்தார். ஜூன் மாதம் 21ஆம் திகதியை ஆதிவாசிகள் தினமாக கனடாவில் கடைப்பிடிக்க கனேடிய அரசாங்கம் அங்கீகரித்துள்ளதுடன், அதற்கு தன்னாலான முழுப் பங்களிப்பையும் ஜனநாயக அம்சங்களுடன் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

### யாழ்ப்பாணப்...

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானியத் தூதுவர் சரா ஹுல்டன், இந்தியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகியோர் நேற்றுக் முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர். இந்தச் சந்திப்பின்போது யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமகால விவகாரங்கள், பிரித்தானியாவுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்வி சார் உடன்படிக்கைகள் பற்றிக் கேட்டறிந்த பிரித்தானியத் தூதுவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும் சமுதாயச் சமையலறையையும் சென்று பார்வையிட்டார்.

அத்துடன், யாழ்ப்பாணம் பொதுநூலகம் மற்றும் வடமாகாண ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுக்கும் தூதுவர் சென்றார். வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸையும் தூதுவர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். (அ-ம-20)

### மன்னாரில்...

மன்னார், தள்ளாடி அருகில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர். ஓட்டோவொன்றின் சாரதியான ஜெயச்சந்திரன் றோசன் (வயது -22) என்பவரே உயிரிழந்தவராவார்.



மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. மன்னாரில் இருந்து பிரதான பாலமூடாகப் பயணித்த மகேந்திரா ரக வாகனமும், மதவாச்சி வீதியூடாக மன்னார் நோக்கிப் பயணித்த ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதிலேயே இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

இன்று இடம்பெறவுள்ள திருமணம் ஒன்றுக்காக கணவன், மனைவி மற்றும் அவர்களது மூன்று குழந்தைகள் என ஐவரும் ஓட்டோவில் மன்னார் நோக்கிச் சென்றுள்ளனர். இதன்போதே இந்த விபத்து இடம்பெற்று ஓட்டோவைச் செலுத்திய சாரதி உயிரிழந்துள்ளார். ஏனையோர் காயங்களுடன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

இல.212, A9 வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள ராஜா பிளாசா கட்டடம் கீழ் தளம், மேல் தளம் அடங்கலாக 2720 சதுர அடியை கொண்டது.

1500 சதுர அடி மேலதிகமாக தரப்படும். வங்கி, நிதி நிறுவனங்கள், பூட்சிற்றி போன்றவற்றை அமைக்க சிறப்பான இடமாகக் காணப்படுகிறது. (cs 50533) N-1)

**077 737 8511**


# அருங்காட்சியகம் இன்று திறப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி கா.இந்திரபாலா அருங்காட்சியகம் இன்று காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. நிகழ்வின் தலைமை உரையை வரலாற்றுத்துறைத் தலைவர் திருமதி சாந்தினி அருளானந்தமும், அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை ஓய்வு நிலை சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்பரட்ணமும் நிகழ்த்தவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் பீடாதிபதி உரையை ஆற்றவுள்ளார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் உரை இடம்பெறவுள்ளது. நன்றியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சஜிதரன் ஆற்றவுள்ளார். (ம)


## வீடு வாடகைக்கு

கொக்குவில் தாவடிப் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**071 282 8017**

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (24.04.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி



### அமரர் குலசேகரம்பிள்ளை புவனேஸ்வரி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும், எமக்கு ஆறுதல் கூறிய உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் எமக்கு இன்றுவரை பல வழிகளிலும் உதவிபுரியும் நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாவல்கட்டை லேன்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 5413 192

(CS 25053) A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
19 • 11 • 1957



மறைவு
24 • 04 • 2023

கடந்த 24.04.2023 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி எலிசபெத் பத்மா மனோன்மணி மார்க்கண்டு (மனோ)

(சின்னக்கடை, கொன்வன்ற் றோட், மன்னார்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.05.2023) புதன்கிழமை காலை சின்னக்கடை மன்னாரிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொன்வன்ற் றோட்,
சின்னக்கடை, மன்னார்.

குடும்பத்தினர்.

**023 222 2396, 077 887 3008** (CR/39847)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.

* யாழ்ப்பாணத்திலிருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* யாழ். நகரில் இருந்து 1 1/2 km தூரத்தில்.
* நான்கு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

தொடர்பு: **077 638 5683, 076 755 8606, 077 259 0391**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: **076 7880 591**
**076 7336 047**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 பாதையுடன்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்

தொடர்பு: **076 7390 413**
**076 4365 814, 077 065 4525**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இளவாலையில் 40 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

* இளவாளையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.

தொடர்பு: **076 333 6079,**
**076 733 6093, 076 911 9371**

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய பொருட்கள், சில்வர் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெஜிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், மாஸ் வகைகள் அன்பளிப்பு பொருட்கள், கிளினர், திரவியங்கள், காண்வோஸ், கொம்போட், வாசனை திரவியம், மாபிள் கிளினர், றூம்ஸ்பிறே, மணிக்கூடு வகைகள் இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**
**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்: தே. கலைத்தாசன் (கரன்) - **021 3155 900**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.